# KANYAKUMARI RURAL DEVELOPMENT SOCIETY
## THIRUPATHISARAM

## ACTIVITY PLANNER – 2019

| Sl. No. | WORK OF THE YEAR 2019 | Jan. | Feb | Mar. | April | May | June | July | Aug. | sep. | Oct. | Nov. | Dec. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல். | | | | | | | | | | | | |
| 2. | நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல். | | | | | | | | | | | | |
| 3. | ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல். | | | | | | | | | | | | |
| 4. | வங்கி முகவர்களை சந்தித்தல். | | | | | | | | | | | | |
| 5. | மருத்துவ முகாம்கள் நடத்துதல். | | | | | | | | | | | | |
| 6. | நன்கொடைகள் வசூலித்தல். | | | | | | | | | | | | |
| 7. | விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல். | | | | | | | | | | | | |
| 8. | விழாக்கள் கொண்டாடுதல். | | | | | | | | | | | | |
| 9. | CASE HISTORY எழுதுதல். | | | | | | | | | | | | |
| 10. | பெற்றோர் சங்க கூட்டங்களில் கலந்து கொள்ளுதல். | | | | | | | | | | | | |
| 11. | பணியாளர் கூட்டங்கள் நடத்துதல். | | | | | | | | | | | | |
| 12. | ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல். | | | | | | | | | | | | |
| 13. | மருத்துவ வசதி செய்து கொடுத்தல், ஆதரவற்ற மற்றும் மனநோயாளிகளை சந்தித்தல் | | | | | | | | | | | | |

Prepared by.

Anbaham-2019.

**<u>1. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்:</u>**

நமது சிறப்பு இல்லங்களை காலை, மாலை நேரங்களில் பார்வையிட்டு பிள்ளைகளின் உடல்நிலை சுத்தம் மற்றும் பிற பணிகளையும் கவனிக்கப்படும்.

SMR - வாரம் - 3

SPASTI - வாரம் - 5

GSHA - வாரம் - 2

ANBAHAM - வாரம் - 2

**<u>2. நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்:</u>**

நமது சிறப்பு இல்லங்களில் ஆதரவற்ற மற்றும் பராமரிப்பு தேவைப்படும் மூளைவளர்ச்சி குன்றிய ஆண்கள், பெண்கள், முதியோர்கள், மனநோயினால் பாதிக்கப்பட்ட நபர்கள் பொது இடங்களிலோ, வீடுகளிலோ இருக்கும் நபர்களை கண்டறிந்து அவர்களை நமது இல்லங்களில் சேர்க்க ஏற்பாடு செய்யப்படும்.

| Name | Homes | Jan | Feb | Mar | Apr | May | June | July | Aug | Sep | Oct | Nov | dec |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Selvi.Victoria | Smr | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | Spasti | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | Gsha | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | Anbaham | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| Mrs. Viji | Smr | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | Spasti | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | Gsha | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | Anbaham | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| Mrs. Sree Kala | Smr | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | Spasti | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | Gsha | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | Anbaham | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |

**3. ஆதார் கார்டு வாங்குதல்:**

ஒவ்வொரு மாதமும் நமது சிறப்பு இல்லங்களில் சேர்க்கப்படும் ஆதரவற்ற நபர்களுக்கு ஆதார் கார்டு எடுக்க நடவடிக்கை எடுத்து ஆதார் கார்டு வாங்கப்படும்.

**4. வங்கி முகவர்களை சந்தித்தல்:**

ஒவ்வொரு மாதமும் வங்கி முகவர்களை சந்தித்து உதவி தொகை வாங்குவதற்கும் ஆதரவற்ற மற்றும் பராமரிப்பு தேவைப்படும் மூளைவளர்ச்சி குன்றிய மாணவ, மாணவிகள், முதியோர்கள், மனநோயினால் பாதிக்கப்பட்ட நபர்களை பற்றிய தகவல்களை கேட்டறியவும், நமது சிறப்பு இல்லங்களில் பணிபுரிய ஆர்வமுடைய நபர்களை கேட்டறியவும், நன்கொடைகள் உதவிகள் செய்யும் நபர்களை பற்றியும், வங்கி முகவர்கள் மூலம் கேட்டறியப்படும்.

செல்வி. விக்டோரியா - மாதம் ஒரு நபர்
திருமதி. விஜி - மாதம் ஒரு நபர்
திருமதி. ஸ்ரீகலா - மாதம் ஒரு நபர்

5. **மருத்துவ முகாம்கள் நடத்துதல்:**

நமது சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் செய்து கொடுக்க மருத்துவ முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

**1. மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி:**

மே – பொது மருத்துவ முகாம்
செப்டம்பர் - தோல் மருத்துவ முகாம்

**2. ஸ்பாஸ்டிக் சென்டர் ஆ.்.ப் கன்னியாகுமரி:**

மே - பொது மருத்துவ முகாம்
செப்டம்பர் – தோல் மருத்துவ முகாம்

3. **<u>அன்பகம்:</u>**

பிப்ரவரி - கண் மருத்துவ முகாம்
ஏப்ரல் - மனநல மருத்துவம்
ஜுன் - பொது மருத்துவம்
அக்டோபர் - மனநல மருத்துவம்

**<u>6. நன்கொடைகள் வசூலித்தல்:</u>**

அன்பியங்கள், குழுக்கள், மற்றும் உதவிகள் செய்யும் நபர்களை சந்தித்து பேசி நமது கார்டு நிறுவனத்தின் திட்டங்களை பற்றி கூறி நமது சிறப்பு இல்லங்களுக்கு தேவையான உதவிகளை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

**<u>7. விழிப்புணர்வு கருத்து கொடுத்தல்:</u>**

நமது சிறப்பு இல்லங்களை பார்வையிட வரும் குழுக்கள், நண்பர்கள், ஆலய மக்கள், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும், அன்பிய மக்களுக்கும் ஊனம் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களையும், கார்டு நிறுவனத்தின் பணிகள் பற்றிய கருத்துக்களையும் சொல்லுதல்.

ஆலயங்களில் உள்ள அன்பியங்கள், பெண்கள் சங்கங்கள், சுய உதவி குழுக்களுக்கு ஊனம் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களையும் கார்டு நிறுவனத்தின் பணிகள் பற்றியும் சொல்லுதல். மாதம் 2 குழுக்களுக்கு கருத்தரங்கு நடத்தப்படும்.

8. **<u>விழாக்கள் கொண்டாடுதல்:</u>**

நமது சிறப்பு இல்லங்களில் நடைபெறும் விழாக்களுக்கு தேவையான உதவிகள் செய்து கொடுத்து விழாக்களில் கலந்து கொள்ளப்படும்.

**<u>SMR:</u>**

ஜனவரி - குடியரசு தின விழா
ஏப்ரல் - ஆண்டு விழா
ஆகஸ்ட் - சுதந்திர தின விழா

செப்டம்பர் - விளையாட்டு விழா
டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

## SPASTI:

ஜனவரி - குடியரசு தின விழா
ஏப்ரல் - ஆண்டு விழா
ஆகஸ்ட் - சுதந்திர தின விழா
டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

## GSHA:

ஜனவரி - பொங்கல் விழா
நவம்பர் - ஆண்டு விழா, முதியோர் தின விழா
டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

## ANBAHAM:

ஜனவரி - பொங்கல் விழா
ஆகஸ்ட் - ஆண்டு விழா
டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

## 9. CASE HISTORY:

நமது சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கும், புதிதாக வரும் நபர்களுக்கும் அவர்களை பற்றிய முழு தகவல்களையும்,புகைபடத்துடன் அறிக்கையை அவரவர் File-ல் சமர்பிக்கப்படும்.

## 10. பெற்றோர் சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

நமது சிறப்பு இல்லங்களில் நடைபெறும் பெற்றோர் சங்கக் கூட்டங்களில் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளை பற்றிய தகவல்களை பெற்றோருக்கு தெரியபடுத்தப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| SMR | - | ஜுன், நவம்பர் | - | முதல் ஞாயிறு |
| SPASTI | - | ஜுன், நவம்பர் | - | 2-வது ஞாயிறு |
| ANBAHAM | - | மார்ச், ஜீலை, நவம்பர் | - | 4-வது ஞாயிறு |

**11. பணியாளர் கூட்டம் மற்றும் பணிமதிப்பீடு கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:**

ஒவ்வொரு மாதமும் நமது சிறப்பு இல்லங்களில் நடைபெறும் பணியாளர் கூட்டங்களில் கலந்து கொண்டு நமது பணிகளை பற்றிய சிரமங்களை பகிர்ந்து கொண்டு திட்டமிட்ட பணிகளை செய்வதற்கு உதவியாக இருத்தல்.

**12. ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:**

மாதந்தோறும் ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்தி அதில் அனைத்து ஒருங்கிணைப்பாளர்களும் தங்களது மாத அறிக்கைகளுடன் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

**13. மருத்துவமனை செல்லுதல்:**

நமது சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு தேவையான மாத்திரைகள் மாதந்தோறும் வாங்கவும், அரசு மருத்துவமனையில் ஆதரவற்ற நிலையிலும், பராமரிப்பு தேவைப்படும் நிலையிலும் தங்கியிருக்கக்கூடிய பெண்களை சந்தித்து, அவர்களை நமது இல்லங்களில் சேர்க்க சந்தித்து பேசவும், நமது இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் போது அவர்களையும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படும்.

திருப்பதிசாரம், துணை திட்ட அலுவலர்.
19-02-2019.

திட்ட அலுவலர்.

திட்ட இயக்குநர்.

# குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம்
# திருப்பதிசாரம் - அஞ்சல்

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத்திட்டம்

## பணிகள் பற்றிய வருட அறிக்கை -2019

குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவுக்குட்பட்ட திருப்பதிசாரம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு கடந்த 36 ஆண்டுகளாக பல்வேறு நலப்பணிகளை செய்து வருகிறது. இதில் ஆதரவற்ற ஊனமுற்றோர், முதியோர், மனநோயினால் பாதிக்கப்பட்டோர் நலனுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் 2019-ம் ஆண்டு செய்த பணிகள் பற்றிய விரிவான அறிக்கை சமர்ப்பிக்கபடுகிறது.

### திட்டத்தின் நோக்கம்:

ஊனமுற்றவர்களின் நலனில் அக்கரை கொண்டு அவர்களின் எதிர்கால வாழ்க்கை பாதிப்படைவதை தடுக்கவும், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும், ஆதரவற்ற முதியோர்களை பராமரிக்கவும், ஆதரவற்ற மனநோயினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு கொடுத்து அவர்களும் சமுதாய மக்களோடு இணைந்து வாழ்வதற்கு வழிவகை செய்யும் நோக்கத்தோடு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 1. மேற்கொண்ட திட்டங்கள்:

1. **மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற் பயிற்சி மையம் –** திருப்பதிசாரம்.
2. **ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆப் கன்னியாகுமரி –** மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற்பயிற்சி மையம் - புளியடி, நாகர்கோவில்.
3. **நல்ல சமாரியன் முதியோர் இல்லம் (பெண்கள்)** - ஆசாரிபள்ளம்.
4. **அன்பாலயா மனநோயாளிகள் இல்லம் (பெண்கள்) –** ஈத்தங்காடு, வெள்ளிச்சந்தை
5. சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம்.
6. வளமேம்பாட்டுத்திட்டம்.

ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொண்ட பணிகள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## 2. <u>மேற்கொண்ட பணிகள்:</u>

1. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்.
2. நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்.
3. ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல்.
4. வங்கி முகவர்களை சந்தித்தல்.
5. மருத்துவ முகாம்கள் நடத்துதல்
6. நன்கொடைகள் வசூலித்தல்.
7. விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல்
8. விழாக்கள் கொண்டாடுதல்.
9. பெற்றோர் சங்கக்கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.
10. Case History எழுதுதல்.
11. பணியாளர் கூட்டங்கள் நடத்துதல்.
12. ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.
13. மருத்துவ வசதி செய்து கொடுத்தல், ஆதரவற்ற மற்றும் மனநோயாளிகளை சந்தித்தல்.

## 3. <u>திட்டப்பணிகள் யார் மூலம் மேற்கொள்ளப்பட்டது.</u>

திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், ஒருங்கிணைப்பாளர்கள், உதவி பணியாளர்கள், விடுதி பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது.

## 4. <u>செய்து முடித்த பணிகள்:</u>

### 1. <u>சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்:</u>

இந்த ஆண்டு திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள் சிறப்பு இல்லங்களை பார்வையிட்ட விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இல்லத்தின் பணிகளையும், தங்கியிருக்கும் பயனாளிகளையும் கவனிக்கப் பட்டுள்ளது. சிறப்பு இல்லத்திற்கு வரும் பார்வையாளர்களிடம் நம்முடைய பணியின் நோக்கம் மற்றும் செயல்படுத்தும் பணிகளை பற்றியும் பேசப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு **மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையம்** 194 முறையும், **‘ஸ்பாஸ்டி’ தொழிற்பயிற்சி மையம்** 209 முறையும், **நல்ல சமாரியன் முதியோர் இல்லம்** 158 முறையும், **அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்** 95 முறையும் பார்வையிடப்பட்டுள்ளது.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை இவ்வருடம் இல்லங்களை பார்வையிட்ட விபரம் தெரிவிக்கிறது.**

| வ.எண் | சிறப்பு இல்லங்கள் | பார்வையிட்ட நாட்கள் |
|---|---|---|
| 1. | SMR | 194 |
| 2. | SPASTI | 209 |
| 3. | GSHA | 158 |
| 4. | ANBALAYA | 95 |
| Total | | 656 |

## 2. இல்லத்திற்கு புதிய உறுப்பினர்களை சேர்த்தல்:

### மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையம்:

இந்த ஆண்டு மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சி மையத்தில் செல்வி. ஜெனிபா, செல்வி. நந்தினி ஆகிய மாணவிகளை புதியதாக சேர்க்கப்பட்டுள்ளது.

### ‘ஸ்பாஸ்டி’ மனவளர்ச்சி குன்றிய – ஆண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்:

ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் செல்வன். சுனித், செல்வன். சுபாஷ், செல்வன். மணி, செல்வன். செல்வகுமார், செல்வன். அரசு, செல்வன். கிருஷ்ணா, செல்வன். மணிகண்ட பிரபு, திரு. ராஜரெத்தினம், செல்வன். கஸ்தூரி ராஜா, செல்வன். மணவாளன், செல்வன். அக்பர் காசீம் ஆகிய 11 நபர்களை புதியதாக சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

### நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் இந்த ஆண்டு புதியதாக திருமதி. இவாஞ்சலின், திருமதி. லலிதாபாய், திருமதி. மரிய புஷ்பம், திருமதி. பேச்சியம்மாள், திருமதி. பூமாலை, திருமதி. புஷ்பம், திருமதி. லெட்சுமி, திருமதி. ஜெருத்துருத்தம்மாள், திருமதி. மணியம்மா, திருமதி. அங்கம்மா, திருமதி. செல்லம்மா, திருமதி. முத்தம்மா, திருமதி. கமலம், திருமதி. காசி தங்கம் ஆகிய 14 முதியோர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் இந்த ஆண்டு திருமதி. கலையரசி, திருமதி. செல்வி, திருமதி. லீலா, திருமதி. சார்லெட், திருமதி. ஆதிலெட்சுமி, திருமதி. புஷ்பம், திருமதி. ரபியா பேகம், செல்வி. அக்ஸலியா ரோஸ், திருமதி. சுப்புலெட்சுமி, திருமதி. மேரிசெல்வி, திருமதி. ஜெருத்துருத்தம்மாள், திருமதி. அன்பரசி, திருமதி. பீலா, திருமதி. சரஸ்வதி, செல்வி. மாரி, திருமதி. காஞ்சனா, திருமதி. கலாராணி, திருமதி. ஷீலா, திருமதி. மாரியம்மா, திருமதி. வளர்மதி, திருமதி. மரிய கொறைற்றி, திருமதி. சித்ரா, திருமதி. செல்வி ஆகிய 23 நபர்களை புதியதாக சேர்க்கப்பட்டுள்ளது.

**இந்த வருடம் புதிதாக நமது இல்லங்களில் சேர்க்கப்பட்டவர்கள் விபரம்:**

| வ.எண் | சிறப்பு இல்லங்கள் | புதியதாக சேர்க்கப்பட்டவர்கள் |
|---|---|---|
| 1. | SMR | 2 பேர் |
| 2. | SPASTI | 11 பேர் |
| 3. | GSHA | 14 பேர் |
| 4. | ANBALAYA | 23 பேர் |
| Total | | 50 பேர் |

## 3. வங்கி முகவர்களை சந்தித்தல்:

1. திருமதி. சோபியா - கருங்கல்
2. சுங்கான்கடை சென்ட்ரல் வங்கி முகவர் - திரு. மணிகண்டன்
4. வெட்டூர்ணிமடம் வங்கி முகவர் திரு. சீமான்
5. கோட்டாறு SBI வங்கி முகவர் திருமதி. ஜெயா
6. அழகியபாண்டியபுரம் வங்கி முகவர் திருமதி. அமுதா
7. வடக்கு தாமரைகுளம் வங்கி முகவர் - திருமதி. பகவதியம்மாள்
8. ஆரல்வாய்மொழி வங்கி முகவர் திருமதி. மாலா
9. ஆசாரிபள்ளம் முத்தூட் வங்கி முகவர் - திரு. ஜோனி

ஆகிய முகவர்களை சந்தித்து பேசப்பட்டுள்ளது.

## 4. ஆதார் கார்டு எடுத்தல்:

### ஸ்பாஸ்டி தொழிற் பயிற்சி மையம்:

ஸ்பாஸ்டி தொழிற் பயிற்சி மையத்தில் தங்கியிருக்கும் செல்வன். தர்வேஷ், செல்வன். கோயில் பிள்ளை, செல்வன். அஜீஸ், செல்வன். விஜயகுமார், செல்வன். சுப்பிரமணியன், செல்வன். பன்னீர் செல்வம் ஆகிய ஆறு பேருக்கும் ஆதார் எடுக்கப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள ஆறு பேரில் செல்வன். தர்வேஷ், செல்வன். கோயில்பிள்ளை இருவருக்கும் ஆதார் கார்டு வந்துள்ளது. மீதி நான்கு பேருக்கும் ஆதார் கார்டு வரவில்லை.

### அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் திருமதி. முரளிலீலா, உலகம்மாள், சரஸ்வதி, பேச்சியம்மாள், திருமதி. சீதை, செல்வி. ஜெயலெட்சுமி ஆகிய ஆறு பேருக்கும் ஆதார் எடுக்கப்பட்டது. அதில் திருமதி. சீதை, செல்வி. ஜெயலெட்சுமி ஆகிய இருவருக்கும் ஆதார் கார்டு வந்துள்ளது. ஏனைய 4 பேருக்கும் ஆதார் கார்டு வரவில்லை.

### மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையம்:

திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையத்தில் செல்வி. ராதா, செல்வி. மாலா, செல்வி. ஜானகி, செல்வி. ஜெனட் ஆகியோருக்கு ஆதார்கார்டு எடுக்கப்பட்டுள்ளது.

### நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் திருமதி. மீனாட்சி, திருமதி. தனம், திருமதி. தயா, திருமதி. சத்தியபாமா ஆகிய 4 பேருக்கும் ஆதார்கார்டு எடுக்கப்பட்டுள்ளது.

**இந்த வருடம் புதிதாக ஆதார் எடுக்கப்பட்டவர்கள் பட்டியல்:**

| வ.எண் | சிறப்பு இல்லங்கள் | புதியதாக ஆதார் கார்டு எடுத்தவர்கள் |
|---|---|---|
| 1. | SMR | 4 |
| 2. | SPASTI | 6 |
| 3. | GSHA | 4 |
| 4. | ANBALAYA | 4 |
| Total | | 18 |

## 5. மருத்துவ முகாம்கள் நடத்துதல்:

## மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையம்:

மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையத்தில் 17-06-2019 அன்று பூதப்பாண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் திரு. ஜோசப் டார்வின் அவர்களால் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் 36 மாணவிகள் பயனடைந்தனர்.

05-12-2019 அன்று பெஜான்சிங் கண் மருத்துவமனை சார்பில் கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் 38 சிறப்பு மாணவிகள் பயனடைந்தனர்.






## ஸ்பாஸ்டி தொழிற் பயிற்சி மையம்:

06-12-2019 அன்று ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் பெஜான்சிங் கண் மருத்துவமனை சார்பில் கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் 65 சிறப்பு மாணவர்களுக்கு கண் பரிசோதனை நடைபெற்றது.

## நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

05-12-2019 அன்று நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் பெஜான்சிங் கண் மருத்துவமனை சார்பில் கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் 16 முதியோர்கள் கண் பரிசோதனை செய்து பயனடைந்தனர்.

28-12-2019 அன்று இராஜாக்கமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் 14 முதியோர்களுக்கு உடல் பரிசோதனை செய்யப்பட்டது.

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

03-02-2019 அன்று அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் ஜோசப் சகாயம் மருத்துவமனை சார்பில் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் 25 பயனாளிகள் பயனடைந்தனர்.

17-06-2019 அன்று பெஜான்சிங் கண் மருத்துவமனை சார்பில் கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் 46 பயனாளிகள் பயனடைந்தனர்.







**<u>இந்த ஆண்டு நடைபெற்ற மருத்துவ முகாம்கள் விபரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.</u>**

| வ. எண் | சிறப்பு இல்லங்கள் | தேதி | மருத்துவ முகாம் | பயனடைந்தவர்கள் |
|---|---|---|---|---|
| 1. | SMR | 05-12-2019<br>17-06-2019 | கண் மருத்துவ முகாம்<br>பொது மருத்துவ முகாம் | 38<br>36 |
| 2. | SPASTI | 06-12-2019 | கண் மருத்துவ முகாம் | 65 |
| 3. | GSHA | 05-12-2019<br>28-12-2019 | கண் மருத்துவ முகாம்<br>பொது மருத்துவ முகாம் | 16<br>14 |
| 4. | ANBALAYA | 03-02-2019<br>17-06-2019 | பொது மருத்துவ முகாம்<br>கண் மருத்துவ முகாம் | 25<br>46 |

## 6. நன்கொடைகள் வசூலித்தல்:

### நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

இவ்வருடம் நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் 162 பேர் ஒருவேளை உணவு நன்கொடையாக வழங்கி உதவி செய்தார்கள்.

ஒவ்வொரு மாதமும் கோட்டாரைச் சேர்ந்த திரு. மரியதாஸ், திரு. வைசாக் அவர்கள் 5 கிலோ தேயிலையும், மளிகை பொருட்களும், ஆசாரிபள்ளத்தைச் சேர்ந்த திரு. ஜெகன் மற்றும் திருமதி. சபிதா ஆகியோர் சீனி மற்றும் உளுந்து ஆகிய பொருட்கள் வாங்கி தந்து உதவி செய்து வருகிறார்கள்.

கோட்டார் ஆயூர்வேதா மருத்துவ கல்லூரி மாணவர்கள் 15 செயர், மெத்தை -1 வாங்கி தந்து உதவி செய்தார்கள். சென்னையைச் சேர்ந்த

திரு. பெஞ்சமின் ஜார்ஜ் அவர்கள் 21 சேலை வாங்கி தந்து உதவி செய்தார்கள். ஆசாரிபள்ளம் கத்தோலிக்க சேவா சங்கம் சார்பில் கட்டில் 1

வாங்கி தந்து உதவி செய்தார்கள். பறக்கையைச் சேர்ந்த திரு. ஷாகுல் ஹமீது அவர்கள் 29 நைட்டியும், வட்டவிளையைச் சேர்ந்த கௌத் அவர்கள் 25 நைட்டியும், திருவனந்தபுரத்தைச் சேர்ந்த திருமதி. ரோஸ்லெட் அவர்கள் நைட்டி, 25 பெட்ஷீட், வட்டகரையைச் சேர்ந்த திருமதி. மேரி ரோஸ் அவர்கள் 17நைட்டி, 2 சேலையும், மற்றும் சிலா் குளியல் சோப், சலவை சோப், Paste, Brush, Bucket, Mug, சலவைத்தூள், பவுடர், ஷாம்பு, அரிசி, தின்பண்டங்களும் வாங்கி தந்து உதவி செய்தார்கள். மேலும் இவ்வருடம் நன்கொடையாக ரூ.44000/- கிடைத்தது.

## மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையம்:

இவ்வருடம் திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையத்திற்கு 1163 நபர்கள் 1 வேளை உணவாகவும், 11 நபர் மூன்று வேளை உணவும் வழங்கி உதவி செய்துள்ளார்கள்.

Dr. சுப்பிரமணியன் அவர்கள் ஒவ்வொரு மாதமும் கோதுமை மாவு, சேமியா 5 Pocket வாங்கி தந்து உதவி செய்கிறார்கள்.

21-2-2019 அன்று Rotary Club of Nagercoil சார்பில் திருமதி. கோகிலா செல்வன் அவர்கள் மின்விசிறி -4, தலையணை -4, Tube light -2, Bedsheet -40, நைட்டி-40, Hot Box -2, 17-04-019 அன்று சேக்ரட்ஹார்ட் ஆலய இறைமக்கள் சார்பில் மின்விசிறி, பழம், சோப், தேங்காய், நைட்டி, டவ்வல், பெட்சீட், அரிசி, மளிகை, புடவை மற்றும் தின்பண்டங்களும், நாகர்கோவிலைச் சேர்ந்த திரு. ஜோதி ராஜா அவர்கள் சில்வர் பிளேட்-100, சில்வர் கப் -100-ம், 17-06-2019 அன்று ரோட்டரி சங்கம் சார்பில் சில்வர் பிளேட் -50 பெட்ஷீட் -7, கிருஷ்ணன்கோவிலைச் சேர்ந்த திரு. முருகேசன் அவர்கள் உழுந்து, பயறு வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

## ஸ்பாஸ்டி தொழிற் பயிற்சி மையம்:

இவ்வருடம் ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையத்தில் 612 பேர் ஒருவேளை உணவாகவும், 27 நபர்கள் மூன்றுவேளை உணவும் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

மேலும் பொருட்களாக 08-03-2019 அன்று சைமன் நகரைச் சார்ந்த

திரு. ஜாண் சுரேஷ் அவர்கள் 37 கட்டிலும், 28-03-2019 அன்று திரு. ராஜா அவர்கள் 2000 லிட்டர் தண்ணீர் டேங்க் ஒன்றும், 17-05-2019 அன்று ரோட்டரி கிளப் ஆப் Nagercoil Suburban சார்பில் டைனிங் டேபிள், 6 செயரும், திரு. கிருஷ்ணன், திரு. மில்டன் ஆகியோர் 50 சில்வர் கப்பும், 04-07-2019 அன்று ரோட்டரி கிளப் ஆப் கிரேட்டர் சார்பில் 100 கிலோ அரிசி, பாய் -4, தலையணை -4, பெட்சீட்-4-ம்,

03-08-2019 அன்று குழித்துறை மறைமாவட்ட அன்பிய ஒருங்கிணையம் சார்பில் சோப்பு, பல்பொடி, எண்ணெய், Tooth Brush, Dettol, Lotion, Banana, Snacks, Nighty, Trouscer, Bedsheet, Towel, Rice ஆகிய பொருட்களும், 08-08-2019 அன்று அருப்பு கோட்டையைச் சேர்ந்த திரு. விக்னேஷ்வரன் அவர்கள் இன்வெட்டர் பேட்டரி -1-ம்,

07-09-2019 அன்று இராஜாக்கமங்கலம் அன்னை தெரசா நற்பணி மன்றம் சார்பில் அரிசி, மளிகை, சோப், பல்பொடி, நிக்கர், T- சர்ட், டவ்வல், பாத்திரங்களும், 10-11-2019 அ ன்று பூதபாண்டியைச் சேர்ந்த திருமதி. சரஸ்வதி அவர்கள் 65 T-சர்ட் வாங்கி தந்து உதவி செய்தார்கள். 24-11-2019 அன்று கோட்டார் சவேரியார் ஆலய திருவிழாவை முன்னிட்டு குமரி மாவட்ட காவல் துறை சார்பில் துணிகளும், ரயில்வே பணியாளர் சார்பில் பாத்திரங்களும் தந்து உதவி செய்தார்கள். மேலும் இவ்வருடம் ரூ.1,12,620/-ம் கிடைத்தது.

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

இவ்வருடம் அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்திற்கு 151 பேர் ஒரு நேர உணவாகவும், 3 பேர் ஒருநாள் உணவாகவும் வழங்கியுள்ளனர்.

கடியப்பட்டணம் 11-வது அன்பியம் சார்பில் சலவை சோப், குளியல் சோப், Shampoo, Banana-வும், திருமதி. புஷ்பராணி அவர்கள் Towel -36, Cake-ம், திரு. வின்செண்ட் லீலா அவர்கள் 25 கிலோ அரிசி, 33 நைட்டி, Powder –ம், திரு. அந்தோணி அவர்கள் 3500 லிட்டர் தண்ணீரும், முட்டம் திருவழிபாட்டு குழு சார்பில் நைட்டி 35, Snacks-ம், நாகர்கோவிலைச் சேர்ந்த திரு. ஷாகுல் ஹமீது அவர்கள் 36 நைட்டியும், முட்டத்தைச் சேர்ந்த திரு. ஜார்ஜ் அவர்கள் 25 கிலோ அரிசியும், காய்கறி, மளிகை பொருட்களும், திக்கணங்கோடு சவேரியார் அன்பியம் சார்பில் புடவை-1, வேஷ்டி-1, சட்டை-1,

டவ்வல்-2, திருவனந்தபுரத்தைச் சேர்ந்த திருமதி. ரோஸ்லெட் அவர்கள் நைட்டி -41, Bra, Panties -ம், முட்டத்தைச் சேர்ந்த திரு. ராபர்ட் ராஜ் அவர்கள் 5 லி கிரைண்டரும், Inner Wheel Club சார்பாக Pillow, Bedsheet, Nighties, Plate, Cup –ம், திருநயினார்குறிச்சியைச் சேர்ந்த திரு. கிரீஷ்குமார் அவர்கள் 50 Chair, Inverter -1, மங்களஅன்னை ஆலய 7-வது அன்பியம் சார்பில் சீனி, அரிசி - 80 கிலோ, சோப்பு, வாழைப்பழமும், சுவாமியார்மடத்தைச் சேர்ந்த திரு. மாஹிம் அவர்கள் 25 நைட்டி, Towel-10, Sweet-ம் காட்டுவிளையைச் சார்ந்த திரு. ஜெரால்டு அவர்கள் பருப்பு - 4கிலோ, Tea Powder 2கிலோ, சீரகம் 750 கிராம், கடுகு -500 கிராம், கோதுமை மாவு 5 கிலோ, ஞாலத்தைச் சார்ந்த திருமதி. மாணிக்க செல்வி அவர்கள் தோசைக்கல்-1, அரிசி 25 கிலோ, மளிகை, காய்கறிகளும் வாங்கி தந்து உதவி செய்தார்கள். மேலும் இவ்வருடம் நன்கொடையாக ரூ.1,01,531/- கிடைத்தது.

**இந்த ஆண்டு உணவு மற்றும் பணம் நன்கொடை விபரம் இல்லங்கள் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒருநேர உணவாக வழங்கியவர்கள் | ஒருநாள் உணவாக வழங்கியவர்கள் | நன்கொடை Rs. |
|---|---|---|---|---|
| 1. | SMR | 1168 | 11 | Rs. 65,000/- |
| 2. | SPASTI | 612 | 27 | Rs. 1,12,620/- |
| 3. | GSHA | 162 | 1 | Rs. 44,000/- |
| 4. | ANBALAYA | 151 | 3 | Rs. 1,01,531/- |

## 7. விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல்:

### மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம்:

-

### அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

24-02-2019 கடியபட்டணம் 61-வது அன்பிய மக்களுக்கும், 13-02-2019 அன்று Rev. Fr. அமுதவளன், Rev. Fr. டாஸ் அவர்களுக்கும்,

21-06-2019 காட்டு விளை பங்குதந்தை அவர்களுக்கும்,

04-07-2019 புனித சேவியர் கத்தோலிக்க கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கும்,

02-08-2019 இனயம், புத்தன்துறை, 03-08-2019 உண்ணாமலைக்கடை, 10-08-2019 கானாவூர், 24-08-2019 மாத்திரவிளை, 01-09-2019 காட்டுவிளை அன்னை ஆலய குழுவினர்களுக்கும், 15-09-2019 சுருளகோடு புனித அந்தோணியார் ஆலய அன்பிய மக்களுக்கும், 06-10-2019 காட்டுவிளை ஆலய இறைமக்களுக்கும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டது.

## ஸ்பாஸ்டி தொழிற்பிற்சி மையம்:

27-05-2019 ராமன்புதூர் திருக்குடும்ப ஆலய அன்பிய ஒருங்கிணைப்பு தலைவி திருமதி. ஹெலன் அவர்களுக்கும், சத்துணவு உதவி பணியாளர் திருமதி. கலா அவர்களுக்கும், 22-06-2019 தோவாளை ஒன்றிய விஜய் மக்கள் இயக்க உறுப்பினர்களுக்கும், 23-06-2019 குமரிமாவட்ட மருத்துவர் சமுதாய பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும், 04-07-2019 சுங்கான்கடை கத்தோலிக்க கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கும், 02-08-2019 குலசேகரம் ஸ்ரீராமகிருஷ்ணா நர்சிங் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கும், 03-08-2019 குழித்துறை மறைமாவட்ட குழு உறுப்பினர்கள் அனைவருக்கும், 15-08-2019 அன்று மணலி புனித அந்தோணியார் ஆலய இறைமக்கள் அனைவருக்கும், 26-10-2019 செறுகோல் புனித அந்தோணியார் ஆலய இறைமக்கள் அனைவருக்கும், 27-10-2019 வெள்ளிகோடு Church of our lady Sorrows ஆலய இறை மக்களுக்கும், 29-11-2019 தோவாளை முத்துநகர் GCM சர்ச் பெண்கள் குழுவினர்களுக்கும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டது.

## நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

05-03-2019 கீழ ஆசாரிபள்ளம் பங்குதந்தை அவர்களுக்கும், 06-03-2019 கார்மல்நகர் கிறிஸ்தவர்களின் பிரசீடிய மக்களுக்கும், கோட்டார் ஆயூர் வேதா கல்லூரி முதல்வரை சந்தித்து அவர்களுக்கும், 04-07-2019 சுங்கான்கடை சென்ட்ரல் வங்கி ஊழியர்களுக்கும், 30-07-2019 இனயம், புத்தன்துறை பங்கு தந்தையை சந்தித்து அவர்களுக்கும், 31-08-2019 மேல மணக்குடி, கீழ மணக்குடி பங்கு தந்தையை சந்தித்து அவர்களுக்கும், 30-09-2019 கானாவூர் 9-வது அன்பிய மக்களுக்கும், 10-10-2019 கடியபட்டணம் 38-வது அன்பிய மக்களுக்கும், 12-12-2019, 13-12-2019 ஆகிய தினம் ஆசாரிபள்ளம் புனித அந்தோணியார் ஆலய 1-ம், 2-ம் அன்பிய இறைமக்களுக்கும், அனந்தன்நகர் வின்சென்ட் தே பவுல் சபை குழுவினர்களுக்கும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டது.

## 8. விழாக்கள் கொண்டாடுதல்:

### மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம்:

15-01-2019 அன்று காலை 9.00 மணிக்கு திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தில் வைத்து திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில் அனைத்து பணியாளர்களும் மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

26-01-2019 அன்று காலை 9.00 மணிக்கு திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தில் திட்ட இயக்குனர் அவர்கள் தலைமையில் குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் திட்ட இயக்குநர் Dr. S. பேசில் ராஜன் அவர்கள் தேசீய கொடியேற்றி மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார்கள்.

17-05-2019 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தில் திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் பள்ளி ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. காலை 10.00 மணிக்கு விளையாட்டு போட்டிகளும், மாலை 3.00 மணிக்கு விழா பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக அண்ணா கல்லூரியின் பேராசிரியராக பணியாற்றும் திரு. K.N விஜய பாஸ்கர் அவர்கள் குடும்பமாக கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றியும், வாழ்த்துரை வழங்கியும், விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கியும் சிறப்பித்தார்கள். இடை இடையே மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

15-08-2019 அன்று சுதந்திர தினவிழா காலை 9.00 மணிக்கு திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இல்ல பொறுப்பாளர் திருமதி. அபிலா அவர்கள் தேசிய கொடியேற்றி மாணவிகளுக்கு இனிப்புகளும் வழங்கி சிறப்பித்தார்கள்.

14-12-2019 அன்று மாலை 3.00 மணிக்கு திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தில் வைத்து திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக புளியடி லுத்தரன் ஆலய போதகர் Rev. ஐய்யாபிள்ளை அவர்கள்

கிறிஸ்மஸ் கேக் வெட்டியும், கிறிஸ்மஸ் மரவிளக்கு ஒளிர செய்தும், வாழ்த்துரை வழங்கியும் நமது இல்ல பயனாளிகளுக்கு கிறிஸ்மஸ் பரிசு வழங்கியும் சிறப்பித்தார்கள். இடை இடையே மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர், திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், உதவி திட்டஅலுவலர்கள், இல்லப் பணியாளர்கள், பெற்றோர் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**இவ்வருடம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான பயிற்சி மையத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் தேதி வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 15-01-2019 | பொங்கல் விழா |
| 2. | 26-01-2019 | குடியரசு தினவிழா |
| 3. | 17-05-2019 | ஆண்டுவிழா |
| 4. | 15-08-2019 | சுதந்திர தினவிழா |
| 5. | 14-12-2019 | கிறிஸ்மஸ் விழா |








## ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம்:

26-01-2019 அன்று ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் காலை 9.00 மணிக்கு திட்ட அலுவலர் அவர்கள் தலைமையில் குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் ரோட்டரி கிளப் ஆ.்.ப் குயின்ஸ் சார்பாக வந்து கலந்து கொண்டு தேசிய கொடியேற்றியும், வாழ்த்துரை வழங்கியும் சிறப்பித்தார்கள். மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் மகிழ்வித்தனர்.

11-05-2019 அன்று ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் இல்ல ஆண்டு விழா கெண்டாடப்பட்டது. காலை 10.00 மணிக்கு விளையாட்டுபோட்டிகளும், மாலை 3.00 மணிக்கு விழா பொதுக்கூட்டமும்

நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக திருமதி. விமலா ராணி (ஆசிரியர் ஓய்வு) அவர்களும், செல்வி. அல்போன்சா அவர்களும் கலந்து கொண்டு

குத்துவிளக்கேற்றியும், வாழ்த்துரை வழங்கியும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கியும் சிறப்பித்தார்கள். இடை இடையே மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இவ்விழாவில் திட்ட இயக்குநர் அவர்களும், திட்ட அலுவலர் அவர்களும், துணை திட்ட அலுவலர்களும், அலுவலக பணியாளர்கள், சிறப்பு இல்ல பணியாளர்களும், பெற்றோர்களும், மாணவ, மாணவிகளும், அன்பாலயா இல்ல பயனாளிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

15-08-2019 அன்று காலை 9.00 மணிக்கு திட்ட அலுவலர் அவர்கள் தலைமையில் சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் திட்ட அலுவலர் அவர்கள் தேசிய கொடியேற்றி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் சிறப்பித்தார்கள்.

15-12-2019 அன்று மாலை 3.00 மணிக்கு திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் விழா கெண்டாடப்பட்டது. இவ்விழாவில் மீட்புரம் CSI ஆலய சபை போதகர் Rev. சேம் அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டியும், கிறிஸ்மஸ் மர மின்விளக்கு ஒளிர செய்தும், வாழ்த்துரை வழங்கியும், நமது மாணவர்களுக்கு கிறிஸ்மஸ் பரிசு வழங்கியும் சிறப்பித்தார்கள். இடை இடையே மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர், திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர், இல்ல பணியாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு கொண்டாடப்பட்ட விழாக்கள் விபரம்:**

| **வ. எண்** | **விழாக்கள் நடைபெற்ற நாட்கள்** | **கொண்டாடப்பட்ட விழாக்கள்** |
|---|---|---|
| 1. | 26-01-2019 | குடியரசு தினவிழா |
| 2. | 11-05-2019 | ஆண்டுவிழா |
| 4. | 15-08-2019 | சுதந்திர தினவிழா |
| 5. | 15-12-2019 | கிறிஸ்மஸ் விழா |





15-01-2019 அன்று நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் காலை 6.00 மணிக்கு உதவி திட்ட அலுவலர் திருமதி. ஸ்ரீகலா அவர்கள் தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில் முதியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

17-12-2019 அன்று மாலை 7.00 மணிக்கு நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக நெய்யூரைச் சேர்ந்த திரு. சேம் தம்பூஜி அவர்கள் குடும்பமாக கலந்து கொண்டு கிறிஸ்மஸ் கேக் கட் பண்ணி சிறப்பித்தார்கள். சிறப்பு விருந்தினர்களும், திட்ட இயக்குநர் அவர்களும், இல்ல பணியாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**<u>நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் விபரம்:</u>**

| **வ. எண்** | **விழாக்கள் நடைபெற்ற நாட்கள்** | **கொண்டாடப்பட்ட விழாக்கள்** |
|---|---|---|
| 1. | 15-01-2019 | பொங்கல் விழா |
| 2. | 17-12-2019 | கிறிஸ்மஸ் விழா |

**<u>அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:</u>**

15-01-2019 அன்று '**அன்பகம்**' மனநோயாளிகள் இல்லத்தில் வைத்து காலை 9.00 மணிக்கு இல்ல ஒருங்கிணைப்பாளர் திருமதி. விஜி அவர்கள் தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பணியாளர்களும், பயனாளிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

15-08-2019 அன்று காலை 9.30 மணிக்கு திட்ட இயக்குனர் Dr. S. பேசில் ராஜன் அவர்கள் தலைமையில் சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது. காட்டு விளை ஆலய பங்குபேரவை உபதலைவர் திரு. ராஜரெத்தினம் அவர்கள் தேசிய கொடியேற்றி வாழ்த்துரை வழங்கி நமது பயனாளிகளுக்கு இனிப்புகளும் வழங்கினார்கள்.

30-08-2019 அன்று அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் வைத்து திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் **அன்பாலயா** இல்ல 2-வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. காலை 10.00 மணிக்கு விளையாட்டு போட்டிகளும், மாலை 3.00 மணிக்கு விழா பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு

விருந்தினராக பேயோடு SBT வங்கி மேலாளர் திரு. கணேசமூர்த்தி அவர்களும், கன்னியாகுமரி Public prosecutor திரு. ஞானசேகர் அவர்களும், காட்டுவிளையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற BSNL உதவி மேலாளர் திரு. ஜெரால்டு அவர்களும், காட்டுவிளை பங்கு பேரவை உபதலைவர் திரு. ராஜரெத்தினம் அவர்களும் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றியும், வாழ்த்துரை வழங்கியும் சிறப்பித்தார்கள். இடை இடையே பயனாளிகள் மற்றும் மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களால் பரிசுகள் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்கள், திட்ட இயக்குநர் அவர்களும், திட்ட அலுவலர் அவர்களும், உதவி திட்ட அலுவலர்களும், அலுவலக பணியாளர்களும், SMR, SPASTI, GSHA பணியாளர்களும், பெற்றோர்களும், இல்ல பயனாளிகளும், SMR, SPASTI, மாணவ மாணவிகளும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள்.

13-12-2019 அன்று **அன்பாலயா** மனநோயாளிகள் இல்லத்தில் வைத்து திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் மாலை 3.00 மணிக்கு கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக பீட்டர் பால் ஆலய பங்கு தந்தை Rev. Fr. பெஸ்கி அவர்கள் கலந்து கொண்டு கிறிஸ்மஸ் மர மின்விளக்கு ஒளிர செய்தும், கிறிஸ்மஸ் கேக் வெட்டியும், வாழத்துரை வழங்கியும் சிறப்பித்தார்கள். காட்டுவிளை ஆலய பங்கு பேரவை உபதலைவர் திரு. ராஜரெத்தினம் அவர்களும் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள். இடை இடையே பயனாளிகளின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களால் பயனாளிகளுக்கு கிறிஸ்மஸ் பரிசு வழங்கப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களும், திட்ட இயக்குநர் அவர்களும், திட்ட அலுவலர் அவர்களும், உதவி திட்ட அலுவலர்களும், அலுவலக பணியாளர்களும், **அன்பாலயா** இல்ல பணியாளர்களும், பெற்றோர்களும், பயனாளிகளும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள்.

**<u>இவ்வருடம் அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் நடைபெற்ற விழாக்கள் தேதிவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.</u>**

| **வ. எண்** | **விழாக்கள் நடைபெற்ற நாட்கள்** | **கொண்டாடப்பட்ட விழாக்கள்** |
|---|---|---|
| 1. | 15-01-2019 | பொங்கல் விழா |
| 2. | 30-08-2019 | ஆண்டுவிழா |
| 4. | 15-08-2019 | சுதந்திர தினவிழா |
| 5. | 13-12-2019 | கிறிஸ்மஸ் விழா |









## 9. CASE HISTORY எழுதுதல்:

ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் உள்ள 6 நபர்களுக்கு திட்ட அலுவலர் அவர்களால் Case History எழுதப்பட்டது.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் உள்ள 32 நபர்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஸ்ரீகலா அவர்களால் Case History எழுதப்பட்டது.

அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் உள்ள 40 நபர்களுக்கு திட்டஒருங்கிணைப்பாளர் திருமதி. விஜி அவர்களால் Case History எழுதப்பட்டது.

| வ.எண் | சிறப்பு இல்லங்கள் | Case History |
|---|---|---|
| 1. | SPASTI | 6 |
| 2. | GSHA | 32 |
| 3. | ANBALAYA | 40 |

## 10. பெற்றோர் சங்கக்கூட்டம் நடத்துதல்:

### மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம்:

29-06-2019 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தில் வைத்து பெற்றோர் சங்கக்கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 6 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

### ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம்:

30-06-2019, 17-11-2019 ஆகிய நாள்களில் ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் வைத்து பெற்றோர் சங்கக்கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 42 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

31-03-2019 அன்று அன்பகம் மனநோயாளிகள் இல்லத்தில் வைத்து மாலை 3.00 மணிக்கு திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் பெற்றோர் சங்கக்கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 11 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

28-07-2019 அன்று அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் வைத்து திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் பெற்றோர் சங்கக்கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 10 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

25-11-2019 அன்று அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் வைத்து திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் பெற்றோர் சங்கக்கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 8 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## இவ்வருடம் இல்லங்கள் வாரியாக நடைபெற்ற பெற்றோர் சங்க கூட்டங்களும், கலந்துகொண்ட பெற்றோர் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | சிறப்பு இல்லங்களின் பெயர்கள் | நடைபெற்ற பெற்றோர் சங்கக்கூட்டங்கள் | கலந்து கொண்ட பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1. | SMR | 1 | 6 |
| 2. | SPASTI | 2 | 42 |
| 3. | ANBALAYA | 3 | 29 |
| மொத்தம் | | 6 | 74 |

## 11.பணியாளர்கள் கூட்டம் நடத்துதல்:

### ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம்:

இந்த ஆண்டு **'ஸ்பாஸ்டி' தொழிற்பயிற்சி மையத்தில்** 6 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

### மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம்:

இவ்வருடம் திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தில் 6 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

## நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

நல்ல சமாரியன் முதியோர் இல்லம், ஆசாரிபள்ளத்தில் இந்த ஆண்டு 5 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

## அன்பாலயா:

அன்பாலயா மனநோயாளிகள் இல்லம், வெள்ளிச்சந்தையில் 7 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

**இவ்வருடம் இல்லங்கள் வாரியாக நடைபெற்ற பணியாளர் கூட்டங்கள் பற்றிய விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | சிறப்பு இல்லங்களின் பெயர் | நடைபெற்ற பணியாளர் கூட்டங்கள் |
|---|---|---|
| 1. | SMR | 6 |
| 2. | SPASTI | 6 |
| 3. | GSHA | 5 |
| 4. | ANBALAYA | 7 |
| மொத்தம் | | 24 |

## 12. ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

இவ்வருடம் 8 ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளப்பட்டது.

## 13. மருத்துவ வசதி செய்து கொடுத்தல், ஆதரவற்ற மற்றும் மனநோயாளிகளை சந்தித்தல்:

19-01-2019, 23-01-2019 ஆகிய நாள்களில் செல்வி. சுனிதாவை காலில் புண் காரணமாக முட்டம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

12-06-2019 அன்று திருமதி. பேபி வசந்தி கால் Operation நடந்தது. செல்வி. முத்துமாரி, செல்வி. மாலா ஆகிய இரு நபரும் மருத்துவமனையில் அனுமதித்த போது கவனிக்கப்பட்டது.

10-07-2019 அன்று திருமதி. சரஸ்வதி என்பவரை உடல்நிலை பலவீனம் காரணமாக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் அனுமதித்து பராமரிக்கப்பட்டது.

19-08-2019 அன்று திருமதி. புஷ்பம், செல்வி. அக்ஸலியா ரோஸ் என்பவரை கோட்டார் அரசு ஆயூர்வேதா மருத்துவமனைக்கு தோல் வியாதிக்காக அழைத்துச் செல்லப்பட்டது.

07-10-2019 அன்று செல்வி. அழகுசுந்தரியை மாரச்சான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

11-10-2019 அன்று திருமதி. ராணிலெட்டை காலில் புண் காரணமாக வெள்ளிச்சந்தை ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

23-10-2019 அன்று திருமதி. ராஜேஸ்வரியை காய்ச்சல் காரணமாக மாரச்சான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

07-11-2019, 11-12-2019 ஆகிய நாள்களில் செல்வி. அழகு சுந்தரியை ஊசி போடுவதற்காக மாரச்சான் மருத்துவமனை அழைத்துச் செல்லப்பட்டது.

| | | |
|---|---|---|
| Psychiatic Ward | - | 18 நாட்கள் |
| Ortho Ward | - | 8 நாட்கள் |
| Isolation Ward | - | 9 நாட்கள் |
| MS Ward | - | 3 நாட்கள் |

ஆகிய நாள்கள் ஆதரவற்ற மனநோயாளிகள் மற்றும் ஆதரவற்ற நபர்களை சந்தித்து பேசப்பட்டது.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் ஜனவரி மாதம் திருமதி. மணி அவர்களையும், மார்ச் மாதம் திருமதி. ஜமுனாபாய் அவர்களையும், ஏப்ரல் மாதம் திருமதி. லலிதாபாய் அவர்களையும், மே மாதம் திருமதி. மணி அவர்களை இரண்டு முறையும், ஜீலை மாதம் திருமதி. மணி, திருமதி. பாரதியம்மா ஆகியோரையும், ஆகஸ்ட் மாதம் திருமதி. ஜமுனாபாய் அவர்களையும், செப்டம்பர் மாதம் திருமதி. மணியம்மா அவர்களையும், அக்டோபர் மாதம் திருமதி. அமுதா அவர்களையும், நவம்பர் மாதம் திருமதி. தாயம்மா அவர்களுக்கும் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிட்சை அளிக்கப்பட்டது.

## 14. பிற நிறுவனங்களை பார்வையிடுதல்:

13-03-2019 அன்று குமாரபுரத்தில் உள்ள பெத்தானியா மனநோயாளிகள் இல்லம் பார்வையிடப்பட்டது. 14-03-2019 அன்று மாத்தார் புனித சூசையப்பர் முதியோர் இல்லம் பார்வையிடப்பட்டது. 13-03-2019 அன்று சகாயபுரம் பிஷப் ஆஞ்ஞி சுவாமி முதியோர் இல்லம் பார்வையிடப்பட்டது.

## 15. பிற நிறுவனங்களுக்கு பயிற்சி கொடுக்க, பயிற்சி பெற செல்லுதல்:

18-02-2019 முதல் 28-02-2019 ஆகிய பத்து நாள்கள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகமும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் இணைந்து நடத்திய கைத்தொழில் பயிற்சியில் கலந்து கொள்ளப்பட்டது.




## 16. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிட வந்த அரசு அலுவலர்கள்:

10-06-2019 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

25-01-2019, 13-04-2019, 13-11-2019 ஆகிய நாள்கள் **'ஸ்பாஸ்டி'** தொழிற்பயிற்சி மையத்தை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்கள் பார்வையிடவந்தார்கள்.

03-01-2019, 13-11-2019 ஆகிய நாள்கள் **'அன்பாலயா'** மனநோயாளிகள் இல்லத்தை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்கள் பார்வையிட வந்தார்கள்.

26-02-2019 அன்று **'நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தை'** மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் அவர்கள் பார்வையிட வந்தார்கள்.

13-06-2019 அன்று அகஸ்தீஸ்வரம் தாலுகா வட்ட வழங்கல் அலுவலர் அவர்களும், 30-08-2019 அன்று மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களும்,

09-09-2019 அன்று அகஸ்தீஸ்வரம் தாலுகா வட்ட வழங்கல் அதிகாரி அவர்களும், 02-12-2019 அன்று மாவட்ட சமூக நலத்துறை அலுவலர்

அவர்களும், ஆசாரிபள்ளம் நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தை பார்வையிட வந்தார்கள்.

18-04-2019 அன்று நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் 8 முதியோர்கள் வாக்களித்தனர். முட்டத்தில் செயல்பட்டு வந்த **அன்பகம்** மனநோயாளிகள் இல்லத்தை வெள்ளிச்சந்தை, ஈத்தங்காடு பகுதியில் மாற்றி **அன்பாலயா மனநோயாளிகள் இல்லமாக** 06-05-2019 அன்று முதல் செயல்பட்டு வருகிறது.

## 5. செய்து முடிக்காத பணிகள்:

இவ்வருடம் செயல் படுத்த திட்டமிட்ட அனைத்து பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

## 6. திட்ட பணிகளை செய்து முடிக்க உதவியாக இருந்தவர்கள்:

திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், ஒருங்கிணைப்பாளர்கள், சிறப்புக்கல்வி ஆசிரியர்கள், முடநீக்கு பணியாளர்கள், உதவியாளர்கள், விடுதி பணியாளர்கள், நிர்வாக பணியாளர்கள் ஆகியோர்கள் உதவியாக இருந்தார்கள்.

## 7. எதிர்கால திட்டங்கள்:

- நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்.
- நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்.
- ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல்.
- வங்கி முகவர்களை சந்தித்தல்.
- மருத்துவ முகாம்கள் நடத்துதல்
- நன்கொடைகள் வசூலித்தல்.
- விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல்
- விழாக்கள் கொண்டாடுதல்.

- பெற்றோர் சங்கக்கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.
- Case History எழுதுதல்.

- ♣ பணியாளர் கூட்டங்கள் நடத்துதல்.
- ♣ ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.
- ♣ மருத்துவ வசதி செய்து கொடுத்தல், ஆதரவற்ற மற்றும் மனநோயாளிகளை சந்தித்தல்.

திருப்பதிசாரம்,
05-02-2020. திட்ட அலுவலர்.

திட்ட இயக்குனர்.